Sri MANAKULA VINAYAGAR
Medical college and Hospital
*Kalitheerthalkuppam, Madagadipet, Puducherry- 605107*

MANA - KURAL
*The official podcast of SMVMCH*

**Name of Resource person: Dr. Thalalini. S** **Podcast Title:** ரேபிஸ் விழிப்புணர்வு

**Department: Microbiology** **Category: Public awareness**

**TRANSCRIPT**

# ரேபிஸ் விழிப்புணர்வு

---

- ✓ **வணக்கம்!** நான் டாக்டர் தாளாளினி. நான் **ஸ்ரீ மணக்குள விநாயகர் மருத்துவக் கல்லூரியில்** பணிபுரிகிறேன்.
- ✓ நாம் இன்று **உலக ரேபிஸ் நோய் தடுப்பு நாளை** முன்னிட்டு **ரேபிஸ்** பற்றி ஒரு சிறு பாஸ்ட்காஸ்ட் பாக்கப் போறோம்.
  **செப்டம்பர்** 28 ஆம் தேதி, ரேபிஸ் தடுப்பூசியை முதலில் உருவாக்கிய **மாமேதை லூயி பாஸ்ட்யூர்** அவர்களின் மறைவுநாளாகும்.

- ✓ **இந்த ஆண்டு உலக ரேபிஸ் தினத்தின் தலைப்பு** —
  **'இப்போதே செயல்படு: நீ, நானும், சமுதாயமும்.'**
- ✓ இதன் பொருள் என்னவென்றால்...
  ரேபிஸ் தடுப்பு என்பது **மருத்துவர் பொறுப்பு மட்டும் அல்ல**. ஒவ்வொரு மனிதரும், குடும்பமும், சமூகமும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.
- ✓ ஒரு நிமிடம் அலட்சியம் = ஒரு உயிரின் இழப்பு!
- ✓ இந்த நாளின் நோக்கம் —
  **ரேபிஸ் தாக்கம் மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் எவ்வளவு தீவிரம் என்பதை வெளிப்படுத்துவதாகும்.** மற்றும், குறிப்பாக பாதிப்பு அதிகம் உள்ள சமூகங்களில், **தடுப்பு முறைகளை வலியுறுத்துவதே முக்கியம்.**

## <u>ரேபிஸ் பற்றி தெரிந்து கொள்வது ஏன் முக்கியம்?</u>

- ✓ சமீபத்தில் ரேபிஸ் செய்திகளில் பரவலாக பேசப்பட்டு, உச்ச நீதிமன்றத்திற்கே சென்றது, மேலும் பல எதிர்ப்புகளுக்கும் காரணமாக இருந்தது. இது வீடுகளில் செல்லப்பிராணிகள் பராமரிப்பு செய்வதற்காக மட்டும் அல்ல, அவர்கள் கடிக்கும் போது பரவும் மிகப்பெரும் ஆபத்தான நோயான **ரேபிஸ்** காரணமாகும். அறிகுறிகள் வந்தவுடன் இது கிட்டத்தட்ட எப்போதும் மரணத்திற்கே வழிவகுக்கிறது.
- ✓ உலகளாவிய முயற்சி **'Zero by 30'** —
  2030க்குள் நாய்கள் மூலம் பரவும் மனித மரணங்களை **பூஜ்யமாக்குவதே இலக்கு.**

### <u>ரேபிஸ்:</u>

- ✓ **ரேபிஸ் , அதற்கு 'நீர்பயம்' என்று பொருள்.**
  இது மிகவும் ஆபத்தான **நோய்**, இது **மத்திய நரம்பியல் அமைப்பை தாக்குகிறது.**
  இதற்குக் காரணமானது **Rabies virus .**
- ✓ பொதுவாக, கடி, கீறல், அல்லது நக்குதல், வெறி நாய்களின் உமிழ்நீர் மூலம் வைரஸ் பரவுகிறது. இது பூனைகள் வெளவால் மூலமாகவும் பரவக்கூடும்.
- ✓ சுமார் **99% மனித நோய்த்தொற்றுகள் நாய்களின் கடியால்** தான் ஏற்படுகின்றன.
- ✓ சில நேரங்களில் நாய்கள் கடிக்கும் நேரத்தில் அறிகுறியே இல்லாமல் இருக்கலாம்.
- ✓ **இந்தியாவில் பாதிப்புகள் பெரும்பாலும் 1–24 வயதுக்குள் உள்ள இளைஞர்கள் மற்றும் குழந்தைகளில் காணப்படுகிறது.**
  தடுப்பூசி மூலம் தடுக்கக்கூடிய இந்த நோயால் இளம் உயிர்கள் இழக்கப்படுவது மிகுந்த சோகமானது.

---

## <u>ரேபிஸ் நோயின் உள்வளர்ச்சி காலம்:</u>

- ✓ பொதுவாக 1 வாரம் முதல் 3 மாதங்கள் வரைவெளிப்படலாம்; அரிதான நிலையில் பல ஆண்டுகள் கூட நீடிக்கலாம்.
- ✓ **முக்கியம்:** அறிகுறிகள் தோன்றுவதற்கு முன்பே **உடனடி தடுப்பு நடவடிக்கை**

---

## <u>அறிகுறிகள்:</u>

தொடக்கத்தில்:

- **தலைவலி,**
- **உடல் சோர்வு**
- **தொண்டை வலி**
- **காய்ச்சல்** (3–4 நாட்கள்)
- 80% பேருக்கு கடிக்கப்பட்ட இடத்தில் **வலி அல்லது (tingling)** – இது மிக முக்கியமான தொடக்க அறிகுறி
- **நீருக்கும் காற்றுக்கும் பயம்** ஏற்படும்

இறுதி நிலையில்:

- வெறும் தண்ணீர் அல்லது அதன் சத்தம் கூட **கழுத்துத் தசைகள் கடுமையாக சுருங்கி, தண்ணீர் குடிக்க முடியாது**
- **வலிப்பு** (convulsions)
- பெரும்பாலும் **2–3 நாட்களில் மரணம்**; சில நேரங்களில் 6 நாட்கள் வரை நீளக்கூடும்

---

<u>தடுப்பு எப்படி?</u>

ஒருமுறை அறிகுறிகள் ஆரம்பித்துவிட்டால், **நாய் கடி நோயில் உயிர் பிழைப்பது மிகவும் கடினம்**.
அதனால் **தடுப்பு தான் மருந்து.**
**நாய்க்கடிக்குப் பிறகு உடனடி நடவடிக்கைகள் (Post-exposure Prophylaxis):**

1. **காயத்தை சுத்தம் செய்தல்:** கடித்த இடத்தை சோப்பும் சுத்தமான நீரும் கொண்டு குறைந்தது 15 நிமிடங்கள் கழுவுங்கள்.
   - இது வைரஸின் தாக்கத்தை **90% குறைக்கக்கூடும்!**
2. பீட்டாடின் போன்ற கிருமிநாசினிகளைப் பயன்படுத்தலாம்.
3. **ஆன்டிபயாட்டிக் + டீட்டனஸ் தடுப்பு**: மருத்துவர் பரிந்துரைத்த விதமாக
4. உடனடியாக அருகிலுள்ள மருத்துவமனைக்குச் அவசியம் செல்ல வேண்டும்.
5. **தடுப்பூசி செலுத்தல்:**

- வெறிநாய்க்கடியைத் தடுக்க தடுப்பூசி கிடைக்கிறது.
- காயங்களை சுத்தம் செய்தல்
- தடுப்பூசி கால அட்டவணையைப் பின்பற்றுதல்
- கடித்தால் நாய்க்கு தடுப்பூசி போடப்பட்ட நிலை எதுவாக இருந்தாலும் தடுப்பூசி போட வேண்டும்.

6. நாய்களுக்கு ரேபிஸ் தடுப்பூசி போடுவது ரேபிஸ் கட்டுப்பாட்டில் முக்கியமான ஒன்றாகும்.
7. தீவிரமான கடிகளில், **Rabies immunoglobulin தேவைப்படலாம்**

நான் முன்பே சொன்னது போல, குழந்தைகள் ரேபிஸால் இறக்கும் அபாயத்தில் உள்ளனர்.

8. தெரு நாய்களுடன் குழந்தைகளை விளையாட அனுமதிக்காதீர்கள்
9. அவற்றை காயப்படுத்தாதீர்கள் / அவற்றைத் தூண்டும் செயல்களைச் செய்யாதீர்கள்
10. குழந்தைகள் நாய்களுடன் செல்லமாக இருக்கும்போது, வாயில் விளையாடும்போது கவனமாக இருங்கள்
11. எச்சிலுடன் தொடர்பு கொள்ள அனுமதிக்காதீர்கள்
12. சண்டையிடும் விலங்குகளைத் துரத்த முயற்சிக்காதீர்கள்

13. அதிகாலையிலோ அல்லது இரவு நேரத்திலோ நடக்கும்போது அல்லது வேறு பாதையில் செல்லும்போது ஏதாவது ஒரு குச்சியை வைத்திருக்கவும்

---

- "**இந்தியாவில்**, ரேபிஸ் இன்னும் ஒரு **பெரும் பொதுச் சுகாதாரச் சவாலாக** உள்ளது. ஒவ்வொரு ஆண்டும், சுமார் **1 இலட்ச மக்கள் தொகையில் 2 பேர்** ரேபிஸ் அபாயத்தில் உள்ளதாக கணிக்கப்படுகிறது.
- நாய் கடி நோய் என்பது **நாயின் நோய் அல்ல... அது மனிதனின் கவனக்குறைவின் நோய்.**
  — நாம் அலட்சியப்படுத்துவதால்தான் கொல்கிறது.
- **வினை விதைத்தவன் வினை அறுப்பான், தினை வினைத்தவன் தினை அறுப்பான்**
- "நாம் விதைத்ததை தான் அறுவடை செய்கிறோம் — எனவே நமது செயல்களில் இன்னும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். அலட்சியம் தவிர்த்து, உடனடியாக செயல்பட வேண்டும். ஒன்றிணைந்து செயல்பட்டால், 2030க்குள் ரேபிஸை முற்றிலும் ஒழிக்கலாம்."

நன்றி!!

---

26/9/25
**Signature of the Resource Person**

26/9/25
**Signature of the HOD**
PROFESSOR & HEAD
DEPARTMENT OF MICROBIOLOGY
SRI MANAKULA VINAYAGAR MEDICAL COLLEGE & HOSPITAL
PUDUCHERRY - 605 107.